(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை



11 சைவசமய பாடப்பரீட்சை : 2023

தரம் பதினொன்று

nselva.com

கால அளவு	3.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ''சென்ற இடத்தாற் செலவிடாது தீது'' என்று கூறியவர் யார்?
   1) தாயுமானவர் 2) திருவள்ளுவர் 3) திருமூலர் 4) ராமகிருஷ்ணர்
2. அறங்களுள் எல்லாம் மேம்பட்ட அறமாகக் கருதப்படுவது எது?
   1) ஈகை 2) ஒப்புரவு 3) நன்றி மறவாமை 4) பொறுமை
3. ஒரு திதியின் அரைப்பங்கு எவ்வாறு அழைக்கப்படும்?
   1) வாரம் 2) நட்சத்திரம் 3) இராசி 4) கரணம்
4. ''பராபரக்கண்ணி'' எனும் நூலை அருளியவர் யார்?
   1) அருணகிரிநாதர் 2) தாயுமான சுவாமிகள்
   3) குமரகுருபர சுவாமிகள் 4) கச்சியப்ப சிவாச்சாரியார்
5. ''ஆக்கியெவையுமளித்தா....'' என்ற திருவருட்பயனில் இறைவனின் எவ்வியல்பு கூறப்படுகிறது?
   1) கடவுள் சர்வ வியாபகர் 3) கடவுள் ஆன்மாக்களுக்கு பற்றுக்கோடாயுள்ளவர்
   2) கடவுள் ஒப்பில்லாதவர் 4) கடவுள் தம்வழி நிற்பார்க்குச் சுகஞ் செய்பவர்
6. குங்கிலியக்கலய நாயனார் எத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கு இறைதொண்டு செய்து வந்தார்?
   1) சீர்காழி 2) திருவாரூர் 3) திருவீரட்டானம் 4) திருவீழிமிழலை
7. சேத்திரப் பாலகர் என்று அழைக்கப்படுபவர் யார்?
   1) விநாயகர் 2) வீரபத்திரர் 3) ஐயனார் 4) வைரவர்
8. குறித்த ஒரு காரணத்தால் நிகழ்த்தப்படும் கிரியைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
   1) நைமித்தியக் கிரியை 2) நித்திய கிரியை
   3) பிரதிஷ்டா கிரியை 4) கும்பாபிஷேக கிரியை
9. ''தம்பிரான் தோழர்'' என்றழைக்கப்படும் சமயகுரவர் யார்?
   1) ஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்
10. ''அமுதசுரபி'' என்ற பெயரிலான அன்னதானமடம் அமைந்துள்ள ஆலயம் எது?
    1) நல்லூர் கந்தசுவாமி கோவில் 2) நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்
    3) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் 4) செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்
11. பின்வருவனவற்றுள் எது மாணிக்கவாசகரால் அருளப்படாதது?
    1) சிவபுராணம் 2) திருத்தொண்டர்புராணம்
    3) திருவெம்பாவை 4) அன்னைப்பத்து
12. ''மயில் விருத்தம்'' என்ற பனுவலைப் பாடியருளியவர் யார்?
    1) திருமூலர் 2) சேக்கிழார் 3) அருணகிரிநாதர் 4) சேந்தனார்
13. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதலாவது செயலாளர் யார்?
    1) டபிள்யூ விஜயரத்தினம் 2) சேர். பொன் இராமநாதன்
    3) எ.ஃப். ஜி. பீரிஸ் 4) சு. இராசரத்தினம்

14. பஞ்சாங்கம் என்ற பெயர் வர முக்கியமான அம்சமாக கருதப்படாதது எது?
1) வாரம் 2) யோகம் 3) திதி 4) இராசி
15. ஈழத்துச்சிதம்பரம் எனப் போற்றப்படும் தலம் எது?
1) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் 2) காரைநகர் சிவன் கோவில்
3) திருக்கோணேஸ்வரம் 4) திருக்கேதீச்சரம்
16. திருமுறை தொகுக்கப் பெற்ற வரலாற்றைக் கூறாத நூல் எது?
1) திருமுறைகண்ட புராணம் 2) பௌட்கராகம வடமொழி வியாக்கியானம்
3) திருப்பதிக் கோவை 4) கோயிற் புராணம்
17. வேண்டியவர்களுக்கு வேண்டிய யாவற்றையும் வரையாது கொடுக்கும் இயல்புடையது எது?
1) சிந்தாமணி 2) சூதம் 3) வல்லி 4) தண்டை
18. பிரம்ம விஷ்ணுக்கள் அடிமுடி காண முடியாதவாறு சோதிப்பிழம்பாகத் தோன்றிய இறைவன் அவர்களுக்கு அருள்புரிந்த தினம் எவ்வாறு அழைக்கப்படும்?
1) திருவாதிரை திருநாள் 2) திருவெம்பாவை திருநாள்
3) கார்த்திகை திருநாள் 4) தீபாவளி திருநாள்
19. திருவாவடுதுறை ஆதீனத்தின் முதற்குருவாய் விளங்கியவர் யார்?
1) உமாபதி சிவாச்சாரியார் 2) நமச்சிவாய தேசிகர்
3) மறைஞான சம்பந்தர் 4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
20. அபரகிரியையுள் அடங்குவது எது?
1) அன்னப்பிராசனம் 2) திருமணம் 3) வித்தியாரம்பம் 4) சிரார்த்தம்
21. ஆறுமுகநாவலர் பிறந்த ஆண்டு எது?
1) 1821 2) 1822 3) 1823 4) 1824
22. நாயன்மார்களுள் இலிங்க வழிபாடு செய்து வீடுபேறு அடைந்தவர் யார்?
1) சாக்கியநாயனார் 2) குலச்சிறையார் 3) திருமூலர் 4) மங்கையற்கரசியார்
23. நிஷ்காமிய கர்மம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
1) பிரார்த்தவினை 2) ஆகாமிய வினை 3) பற்றற்ற வினை 4) சஞ்சிதவினை
24. ''விடிவாம் அளவும் விளக்கும் அனைய மாயை" இக்கூற்று இடம் பெறும் நூல் எது?
1) திருக்குறள் 2) திருமந்திரம் 3) திருவாசகம் 4) திருவருட்பயன்
25. 21 நாட்கள் அனுட்டிக்கப்படும் விரதம் பின்வருவனவற்றுள் எது?
1) கந்தசஷ்டி 2) விநாயகசஷ்டி 3) புரட்டாதிச்சனி 4) வரலக்சுமி விரதம்
26. ஆருத்திரா தரிசனத்துடன் தொடர்புடைய விரதம் எது?
1) வரலக்சுமி விரதம் 2) மார்கழி திருவாதிரை
3) கார்த்திகை விளக்கீடு 4) கந்தசஷ்டி விரதம்
27. உருத்திராக்கம் எங்கே தரித்தல் ஆகாது?
1) சிகை 2) சிரம் 3) காது 4) இடுப்பு
28. காலத்தால் முந்திய இந்திய இசைநூல் எது?
1) இருக்கு வேதம் 2) யசுர் வேதம் 3) சாம வேதம் 4) அதர்வண வேதம்
29. உலகின் மிக உயரமான கொடித்தம்பம் அமைந்துள்ள ஆலயம் எது?
1) நல்லூர் கந்தசுவாமி ஆலயம் 2) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்
3) நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் 4) கருதாவனைப் பிள்ளையார் ஆலயம்
30. மெய்கண்ட தேவரின் தந்தையான அச்சுத கணப்பாளரின் ஆசிரியர் யார்?
1) உமாபதி சிவாச்சாரியார் 2) மறைஞான சம்பந்தர்
3) மெய்கண்ட தேவர் 4) அருணந்தி சிவாச்சாரியார்
31. பரிகளை நரிகளாக்கிய சம்பவத்தோடு தொடர்புடைய சமயகுரவர் யார்?
1) ஞான சம்பந்தர் 2) நாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்
32. சுவாமி விபுலானந்தரின் இயற்பெயர் என்ன?
1) சாமித்தம்பி 2) மயில்வாகனம் 3) கந்தப்பிள்ளை 4) ஆறுமுகம்
33. ஆலயங்கள் இல்லாத இடத்தில் ஆலயத்தை அமைத்து இறைவனை பிரதிஷ்டை செய்தல் எவ்வாறு அழைக்கப்படும்?
1) ஆவர்த்தனம் 2) புனராவர்த்தனம் 3) அநாவர்த்தனம் 4) அந்தரிதம்
34. தேவர்கள் முன் விநாயகர் நடனமாட அதைப் பார்த்து சிரித்தவர் யார்?
1) சந்திரன் 2) இந்திரன் 3) திருமால் 4) பிரம்மா

35, 37 வரையுள்ள வினாக்களுக்கு கீழ்த்தரப்பட்ட தகவலை அடிப்படையாக கொண்டு விடை தருக.

A ''சுண்ணவெண சந்தனச்....'' B ''மண்சுமந்து கூலி கொண்டு...'' C ''மட்டிட்ட புன்னை .....'' D ''தம்மையே புகழ்ந்திச்சை ...''	பதிகம்

I ஆடிச்சுவாதி J ஆனிமகம் K வைகாசி மூலம் L சித்திரை சதயம்	குருபூசை

E ''பூம்பாவையை உயிர்ப்பித்தமை F செங்கற்களை பொன் கட்டிகளாக்கியமை G சிவபெருமான் கூலியாக வந்து அணைகட்டி பிரம்படி பட்டமை H கொல்ல ஏவிய யானை வலம் வந்து வணங்குதல்	அற்புதம்

35. சேரமான் தோழருடன் சம்பந்தப்பட்ட சரியான தொடர்பு எது?
1) BFI 2) CEK 3) D FI 4) AEK

36. திருப்புகலூர் எனும் தலத்திலே சிவனடி நிழலில் இரண்டறக் கலந்த நாயன்மார் பற்றிய சரியான தொடர்பு எது?
1) AHL 2) BGJ 3) CGK 4) DFL

37. ஞானநெறியுடன் தொடர்புடைய நாயன்மார் பற்றிய சரியான தொடர்பு எது?
1) AFI 2) BGJ 3) CGK 4) DFJ

38 - 40 வரையுள்ள வினாக்களுக்கு கீழ்த்தரப்பட்ட தகவலை அடிப்படையாக கொண்டு விடை தருக.

அ)

A - சகலாகம பண்டிதர் B - கொற்றவன்குடி முதலியார் C - சுவேதனப் பெருமான்	சந்தானகுரவர்

ஆ)

D - இருபா இருபது E - சிவஞான போதம் F - சங்கற்ப நிராகரணம்	நூல்

இ)

G - ஐப்பசி சுவாதி H - புரட்டாதி பூரம் I - சித்திரை அத்தம்	குருபூசை

38. திருத்துறையூரிலே அவதரித்த சந்தான குரவர் பற்றிய சரியான தொடர்பு யாது?
1) ADH 2) BEI 3) CFG 4) ADG

39. பரஞ்சோதி முனிவரிடம் ஞான உபதேசம் பெற்ற சந்தானகுரவர் பற்றிய சரியான தொடர்பு யாது?
1) AEH 2) BDI 3) CEG 4) CEH

40. மார்கழிமாத கொடியேற்றத் திருவிழா ஒன்றிலே, ஏறாது நின்ற கொடியை ஏறச்செய்த சந்தான குரவர் பற்றிய சரியான தொடர்பு?
1) AFI 2) BFG 3) CDI 4) BFI

(40 புள்ளிகள்)

பகுதி - II

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு ''நாவலர்'' என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்த ஆதீனம் எது?
2. ஒருவர் இறந்த பின் ஒருவருடகாலம் வரையில் ஒவ்வொரு மாதமும் அவர் இறந்த திதியில் செய்யப்படும் கிரியை யாது?
3. கந்தரலங்காரம் என்ற நூலைப் பாடியவர் யார்?
4. நித்திரை விட்டெழுந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?
5. அட்டாங்க நமஸ்காரம் ஆவது யாது?
6. திருக்கோயிலிலே செய்யத்தகாத குற்றங்கள் 2 தருக?
7. நல்லூர் கந்தசுவாமி கோயிலில் எத்தனை நாட்கள் மகோற்சவம் நடைபெறும்?
8. பூர்ணிமாந்த முறை என்றால் என்ன?
9. ''பட்டகட்டையில் பகற்குருடு போகிறது'' என்ற கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
10. விஞ்ஞானகலர் என்றால் என்ன?

(1 x 10 = 10 புள்ளிகள்)

2. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. "பச்சைமா மலை போல் ....."
2. "தூக்கும் பனுவல் துறை தோய்ந்த....."
3. "சிந்திக்கிலேன் நின்று ....."
4. "குனித்த புருவமும் ....."
5. "கற்றவர் விழுங்கும் ....." **(8x 2 = 16** புள்ளிகள்**)**

3. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.

1. "பயனில்சொல் பாராட்டு ....."
2. "புத்தேளுலகத்தும் ....."
3. "அறிவினுள் எல்லாந் ....."
4. "ஈத்து உவக்கும் இன்பம் ....."
5. "இடனில் பருவத்தும் ....." **(1 x 4 =4** புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. "சைவ மரபில் சமயகுரவர்கள் மிக முக்கியமானவர்கள்"

1. சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த இடம், அவரின் பெற்றோர்களின் பெயர் ஆகியவற்றை குறிப்பிடுக.
2. சுந்தரரை ''வன்றொண்டன்" என அழைத்தவர் யார்?
3. சுந்தரர் எப்பதிகம் பாடி வலக்கண் பார்வையைப் பெற்றார்?
4. சுந்தரர் செய்த அற்புதங்கள் இரண்டினைக் குறிப்பிடுக **(10** புள்ளிகள்**)**

2. "இந்த சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்காகும்"

1. விரதம் என்பதை விளக்குக.
2. திருவெம்பாவை விரதம் எப்பொழுது ஆரம்பமாகும்?
3. திருக்கார்த்திகை விரதம் எச்சம்பவத்தை நினைவு கூறுகின்றது.
4. வரலட்சுமி விரதம் அனுட்டிக்கப்படுவதன் நோக்கம் யாது?
5. சைவசமயத்தவர் புரட்டாதிச் சனி விரதத்தினை எவ்வாறு அனுட்டிப்பார்கள்?

(10 புள்ளிகள்**)**

3. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'

1. குடுக்கை கூறும் நிகழ்வு இடம்பெறும் ஆலயத்தின் பெயர் என்ன?
2. இவ்வாலயத்தில் பூசை செய்பவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவார்கள்?
3. பின்வரும் ஆலயங்களின் தலவிருட்சங்களைக் குறிப்பிடுக.
   அ. களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்
   ஆ. கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம்
   இ. நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்
4. புன்னைச் சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் பிரதான சடங்குகள் ஐந்தினைக் குறிப்பிடுக. **(10** புள்ளிகள்**)**

4. "ஆலயங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் கும்பாபிஷேகமும் ஒன்றாகும்"

1. கும்பாபிஷேகம் என்பதற்கு வேறு ஒரு பெயர் தருக.
2. கும்பாபிஷேக கிரியையைகளைச் செய்வதற்கு முன் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளில் ஏதாவது மூன்று தருக?
3. சாந்தி கிரியைக்கும், பெருஞ்சாந்தி கிரியைக்கும் இடையில் உள்ள வேறுபாடு யாது?
4. பிரதிஷ்டை வகைகளுள் ஏதாவது இரண்டினைக் குறிப்பிடுக.
5. சுபமூகூர்த்த நிர்ணயம் இல்லாத ஒரு பிரதிஷ்டை வகையைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்**)**

5. "கந்த புராணம் கச்சியப்பசிவாசாரியரால் தமிழில் அருளப்பட்டது"

1. கந்தபுராணத்தில் உள்ள மீட்சிப்படலம் எதனைக் கூறுகிறது?
2. மீட்சிப்படலம் எந்தக்காண்டத்தில் உள்ளது?
3. சூரனை வதம் செய்த முருகன், சூரனை எந்த வடிவில் ஆட்கொண்டருளினார்?
4. முருகப் பெருமானது படைத்தலைவர் யார்?
5. முருகப் பெருமான் போர்க்களத்தினின்றும் நீங்கி தேவர்கள், பூதகணங்களுடன் சென்றடைந்த கோயில் எது?

(10 புள்ளிகள்**)**